FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை

under Section 173 BNSS

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~குற்ற.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~

C 8129878

1. District மாவட்டம் Thoothukudi | PS காவல் நிலையம் Vigilance and Anti-Corruption Thoothukudi | Year ஆண்டு 2025 | FIR No. மு.த.அ. எண் 09/2025 | Date நாள் 13.08.2025

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as Amended in 2018. | Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 08.08.2025 at about11.00 hrs

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.08.2025 | Time : நேரம் 09.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.08.2025 | Time நேரம் 10.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Erachi VAO office, Ettayapuram Taluk, Thoothukudi District 60 Kms North West

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G.மாரீஸ்வரி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கண்ணன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் | (g) Address : முகவரி 776/6, வெற்றி விநாயகர் கோவில் தெரு, இந்திரா நகர், இனாம் மணியாச்சி ஊராட்சி, கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவைபெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.செந்தில்குமார், கிராம நிர்வாக அலுவலர், ஈராச்சி கிராமம், எட்டயாபுரம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் தெரிவிப்பதில் தாமதம் No

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

--

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு --

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் --

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

-- தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது --

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed J.Anitha ..... Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13/8/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

J.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 13.08.2025 at 10.45 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் J. ANITHA
Rank: நிலை .....No. எண் .....

Inspector of Police,
VPAC, Thoothukudi.

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.09/2025

பணிந்து அனுப்பப்படுகிறது.

இன்று 13.08.2025-ம் தேதி காலை 09.30 மணிக்கு J.அனிதா, காவல் ஆய்வாளர், தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது தூத்துக்குடி மாவட்டம். கோவில்பட்டி வட்டம், இனாம் மணியாச்சி ஊராட்சி,இந்திரா நகர், வெற்றி விநாயகர் கோவில் தெரு, கதவு எண் 776/6, என்ற முகவரியில் குடியிருந்து வரும் திருமதி. G.மாரீஸ்வரி, என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவில் தனது தாயாரின் தாயான (பாட்டி) திருமதி.மாரியம்மாள் (லேட்) அவர்கள் 15.06.1989ம் தேதியன்றும், தனது தாயாரின் தந்தையான (தாத்தா) திரு.சுப்பு மூப்பனார் (லேட்) அவர்கள் 23.09.2003ம் தேதியன்றும் எட்டையாபுரம் வட்டம், ஈராச்சி, சேனையார் தெரு, கதவு எண் 148/1 என்ற முகவரியில் வைத்து வயது முதிர்வின் காரணமாக இயற்கை எய்திவிட்டார்கள் என்றும், அவர்களது இறப்பினை தனது தாயார் திருமதி.பாப்பாத்தி மற்றும் அவரது உடன் பிறந்த சகோதரிகள் அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறிவிட்டார்கள் என்றும், தனது தாத்தா மற்றும் பாட்டியின் பெயரிலுள்ள சொத்தினை அவர்களின் வாரிசுதாரர்களின் பெயரில் மாற்றம் செய்வதற்கு, அவர்களது இறப்பு சான்றிதழ் தேவைப்படுவதால், தான் அவர்களது மகள் வழி பேத்தி என்ற முறையில் அவர்களின் இறப்பினை பதிவு செய்து சான்றிதழ் பெறுவதற்கு மனு அளித்திருந்ததாகவும், அதனை பரிசீலனை செய்து பரிந்துரை செய்வதற்கு ஈராச்சி கிராம நிர்வாக அலுவலர் திரு.செந்தில்குமார் ரூ.3,500/- லஞ்சம் கேட்பதாகவும், எனவே தன்னிடம் லஞ்சம் கேட்கும் ஈராச்சி கிராம நிர்வாக அலுவலர் திரு.செந்தில்குமார் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று அது குறித்து இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட ஈராச்சி கிராம நிர்வாக அலுவலர் திரு.செந்தில்குமார் பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தையை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்புத்துறை, இயக்குநரகம், சென்னை அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்து அனுமதி பெற்றும் புகார் மனுவின் தன்மைக்கேற்ப தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 09/2025 பிரிவு 7(a) of Prevention of Corruption Act, 1988 as Amended in 2018-படி 13.08.2025-ம் தேதி காலை 10.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் : G.மாரீஸ்வரி, வயது 35/2025, க/பெ.கண்ணன், கதவு எண் 776/6, வெற்றி விநாயகர் கோவில் தெரு, இந்திரா நகர், இனாம் மணியாச்சி ஊராட்சி, கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட்டம். பெறுநர் : காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா / அம்மா, நான் மேற்படி முகவரியில் என் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். என் தாயார் திருமதி.பாப்பாத்தி (லேட்) அவர்கள் 05.02.1993ம் தேதியன்று இறந்து விட்டார். நான் என்னுடைய அம்மாவிற்கு ஒரே மகள் ஆவேன். எனது தாயாரின் தாயான திருமதி.மாரியம்மாள் (லேட்) அவர்கள் 15.06.1989ம் தேதியன்றும், எனது தாயாரின் தந்தையான திரு.சுப்பு மூப்பனார் (லேட்) அவர்கள் 23.09.2003ம் தேதியன்றும் எட்டையாபுரம் வட்டம், ஈராச்சி, சேனையார் தெரு, கதவு எண் 148/1 என்ற முகவரியில் வைத்து வயது முதிர்வின் காரணமாக இயற்கை எய்திவிட்டார்கள். எனது தாயார் திருமதி.பாப்பாத்தி மற்றும் அவரது உடன் பிறந்த சகோதரிகள் அவர்களது அறியாமையின் காரணமாக அவர்களது தாய் மற்றும் தந்தையின் இறப்பினை பதிவு செய்ய தவறிவிட்டார்கள். தற்போது எனது தாய் வழி தாத்தா மற்றும் பாட்டியின் பெயரிலுள்ள சொத்தினை அவர்களின் வாரிசுதாரர்களின் பெயரில் மாற்றம் செய்வதற்கு, அவர்களது இறப்பு சான்றிதழ் தேவைப்படுவதால், நான் அவர்களது மகள் வழி பேத்தி என்ற முறையில் அவர்களின் இறப்பினை பதிவு செய்து சான்றிதழ் வழங்க வேண்டி கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த ஜூன் மாதத்தில் தனித்தனியாக அதற்குரிய ஆவணங்களுடன் மனு அளித்தேன். அப்போது அங்கிருந்தவர்கள் என்னிடம் என்னுடைய மனுக்களை முதலில் விசாரணைக்காக ஈராச்சி VAO-ற்கு அனுப்பி வைப்போம் என்று தெரிவித்தார்கள். அதன் பேரில் நான் என்னுடைய மனுக்கள் ஈராச்சி VAO ஆபிசிற்கு வந்துவிட்டதா என்பது குறித்து நேரடியாகவும், தொலைபேசி மூலமும் விசாரித்து வந்தேன். இந்நிலையில் கடந்த ஜூலை மாதத்தில் என்னுடைய மனுக்கள் ஈராச்சி VAO ஆபிசிற்கு வந்துவிட்டதாக தெரிவித்தார்கள். அதனையடுத்து நான் கடந்த ஜூலை மாதத்தில் ஒரு நாள்

ஈராச்சி VAO ஆபிசிற்கு சென்று அங்கிருந்த VAO திரு.செந்தில்குமார் அவர்களை சந்தித்து என்னுடைய மனுக்கள் மீதான நடவடிக்கை குறித்து அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் உங்கள் மனுக்கள் இப்போதுதான் என்னிடம் வந்துள்ளது அதில் நிறைய சரிபார்க்க வேண்டி உள்ளது, அதனால் கொஞ்சநாள் கழித்து வந்து பாருங்கள் என்று சொல்லிவிட்டார். நானும் சரி என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்து விட்டேன். பின்னர் நான் கடந்த 08.08.2025ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் மீண்டும் ஈராச்சி VAO ஆபிசிற்கு சென்று அங்கிருந்த VAO திரு.செந்தில்குமார் அவர்களை சந்தித்து என்னுடைய மனுக்கள் மீதான நடவடிக்கை குறித்து கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் உங்கள் தாத்தா மற்றும் பாட்டி இறந்து பல வருடங்கள் ஆகி விட்டது, மேலும் அவர்களுக்கு நேரடி வாரிசுகளாக நான்கு பேர் உள்ள நிலையில் நீங்கள் மனு அளித்துள்ளீர்கள், எனவே உங்கள் மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் நிறைய வேலைகள் இருக்கிறது, எனக்கு ரூ.3,500/- லஞ்சமாக கொடுத்தீர்கள் என்றால் நான் உங்கள் மனுக்கள் மீதான அனைத்து வேலைகளையும் முடித்து உங்களுடைய தாத்தா மற்றும் பாட்டியின் இறப்பினை பதிவு செய்து சான்றிதழ் வழங்க பரிந்துரை செய்து வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்துவிடுகிறேன் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் சார் எங்களுடைய ஆவணங்கள் எல்லாம் சரியாகத்தானே இருக்கிறது என்று கூறினேன். அதற்கு அவர் அப்படியா சரி எனக்கு ஒன்றும் பிரச்சனை இல்லை. உங்களுடைய மனுக்களை நிராகரிக்க பரிந்துரை செய்து வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்து விடுகிறேன் என்று கூறினார். உடனே நான் என்ன செய்வதென்று தெரியாமல் அவரிடம் சார் அப்படி ஏதும் செய்து விடாதீர்கள் நீங்கள் கேட்ட பணத்தை எப்படியாவது ரெடி பண்ணி கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி நான் அடுத்த வாரம் திங்கள், செவ்வாய் லீவில் சென்று விடுவேன். அதனால் 13.08.2025ம் தேதி புதன் கிழமையன்று வந்து பணத்தை கொடுங்கள், உங்கள் மனுக்கள் மீதான வேலையை நான் இப்போதே ஆரம்பித்து விடுகிறேன் என்று சொன்னார். அதற்கு நானும் சரி சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன் பின்னர் நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்த போது நாம் அனைத்து ஆவணங்களும் சரியாக சமர்ப்பித்திருந்தும் ஒரு அரசு அதிகாரி அவரது கடமையை செய்வதற்கு இப்படி லஞ்சம் கேட்கிறாரே என்று எனக்கு மன உளைச்சலாக இருந்தது. எனவே அவர் மீது லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார்

கொடுத்துவிடலாம் என்று முடிவு செய்தேன். என்னிடம் ரூ.3,500/-லஞ்சம் கேட்கும் ஈராச்சி VAO திரு.செந்தில்குமார் மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டு இந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். இப்படிக்கு xxxxxx s/d., by G.மாரீஸ்வரி, 13.08.2025. இணைப்பு : (1.) திரு.சுப்பு முப்பனார் அவர்களின் இறப்பினை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்க வேண்டி கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அளிக்கப்பட்ட மனுவின் நகல். (2.) திருமதி.மாரியம்மாள் அவர்களின் இறப்பினை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்க வேண்டி கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அளிக்கப்பட்ட மனுவின் நகல். Sir, Received by me on 13.08.2025 at 09.30 hrs and verified the antecedents of both the complainant and the accused, and after getting the oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai and I registered a case in Thoothukudi V&AC Cr.No.09/2025 u/s 7(a) of Prevention of Corruption Act 1988 as Amended in 2018 at 10.00 hrs. xxxxxx s/d., by J.ANITHA 13.08.2025, Inspector of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, வாதியின் அசல் புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த இணைப்புகள் ஆகியவற்றை இணைத்து கனம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை எனது விசாரணைக்கும் எடுத்துக் கொண்டேன்.

J. Anitha
13/8/2025
Inspector of Police
V&AC, Thoothukudi.